ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ 2

ஆகாய பூச்சிரிக்க அழகுநிலா விழக்கெரிக்க 2
ஓயாமல் அழுவதேனடி கண்ணே உலகத்தை நிமிர்ந்துபாரடி 2

ஆகாய பூச்சிரிக்க அழகுநிலா விழக்கெரிக்க 2

சுற்றிவரும் தீ எரியும் தேசத்தில் நீ பிறந்தாய்
பட்டினியில் பார் துடிக்க பால்கேட்டு நீ அழுதால் 2
வெட்டு வெளி திறந்து பாரடி காலை
கொட்டுகின்ற நிலவை பாரடி 2

ஆகாய பூச்சிரிக்க அழகுநிலா விழக்கெரிக்க 2

பாய்விரித்து படுத்தோமா உறங்க வில்லை குண்டு
பத்து முறை கூவிவரும் இரங்கவில்லை 2
வாய்திறந்து அழுதிடவும் வழியில்லையே இங்கே
வஞ்சகரின் கொடுமைகு ஓர் முடிவில்லையே 2

ஆகாய பூச்சிரிக்க அழகுநிலா விழக்கெரிக்க 2

தேன்றலையும் தீ எரிக்கும் காலமடி கண்ணே
துாயகத்தில் அகதியாகும் கோலமடி 2
கோன்றலையும் விலங்குகளின் கொடுமையிலே இங்கே
கோடித் துன்பம் ஆனதடி அடிமையிலே 2

ஆகாய பூச்சிரிக்க அழகுநிலா விழக்கெரிக்க 2
ஓயாமல் அழுவதேனடி கண்ணே உலகத்தை நிமிர்ந்துபாரடி 2

ஆகாய பூச்சிரிக்க அழகுநிலா விழக்கெரிக்க 2